## தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு - 2015

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் VII ஆவது பகுதியின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 அம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது உரிய சொத்து வகுப்புக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதி மாத்திரம் மீள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்த பெறுமதியில் வெளியிடும் போது மீள் மதிப்பீடு அமுலாகும் திகதி, சுயாதினமான மதிப்பீட்டாளர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டவரா எனவும், சொத்துக்களின் நியாயப் பெறுமதியில் மதிப்பீடு செய்யும் போது மதிப்பிடப்பட்ட முறைமை மற்றும் முக்கியமான எண்ணக்கருக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட எனினும், இன்னும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து நியாயப் பெறுமதியை கணக்குகளில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் ரூபா 15,445,186 கிரயமான சொத்துக்கள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் அதிகாரச்சட்டத்தின் 5(ஆ) பிரிவின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குத் தயாரிக்கப்பட்ட ‘‘அரசாங்க மற்றும் தனியார் பிரிவுகளின் முயற்சிகளினால் விஞ்ஞான, தொழில்நுட்ப பயன்பாடுகள் தொடர்பாக முன்னைய ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளின் மீளாய்வு அறிக்கை’’ அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ஆணைக்குழுவின் செயற்பட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 889,417 மிகையைக் காண்பித்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 542,816 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,432,233 தொகையான அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 3,681,647 இனால் குறைவடைந்த போதிலும் செலவினம் ரூபா 5,113,880 இனால் குறைவடைந்தமையால் மேற்கூறப்பட்ட நிதிவிளைவின் முன்னேற்றத்திற்கு பங்களித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு முதல் கடந்த 04 வருடங்களின் நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக இருந்த பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டின் போது மிகையாக மாற்றமடைந்திருந்தது. ஊழியர் வேதனங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சீராக்கப்பட்டதன் பின்னர் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 7,460,849 தொகையான பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மிளாய்வாண்டின் போது 114 சதவீதத்தால் ரூபா 15,946,234 இற்கு அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தால் அதிகாரச்சட்டத்தின் 1 ஆவது பகுதியின் 5 ஆவது பிரிவின் பிரகாரம், விஞ்ஞான மற்றும் தொழில்நட்ப அபிவிருத்திக்கான கொள்கை மற்றும் திட்டமிடல் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல், பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்தல், சுகாதார, போசனை மற்றும் வறுமையை நீக்குதல், கல்வி, பயிற்சியும் ஆராய்ச்சியும் தொடர்பாக தேவையான மனித மற்றும் ஏனைய வளங்களின் அபிவிருத்திக்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நிதியத்தை ஒதுக்குவதற்குரிய கொள்கை மற்றும் திட்டங்களைத் தயாரித்தல், இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் செயலாற்றலை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான அறிக்கையொன்றை வருடாந்தம் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தல் இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாட்டை இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை கூட்டுதல் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு மண்டபமொன்றை வழங்குதல் மற்றும் அது தொடர்பாக அமைச்சருக்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் என்பன ஆணைக்குழுவின் பணியாக இருந்தது.

மேற்கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை இனங்கண்டு மீளாய்வினை ஆரம்பிப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாட்டிற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,995,861 தொகை செலவில் 7 ஆவது இரண்டாண்டுகளிற்கு ஒரு முறையாக விஞ்ஞான மற்றம் தொழில்நுட்ப மாநாடு நடாத்தப்பட்டிருந்த போதிலும், அந்த மாநாட்டின் போது 10 துறைகளுக்குரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியொன்றை ஏற்படுத்துவதற்கு இணக்கப்பாட்டிற்கு வந்திருந்த போதிலும், அந்த செயற்பாடற்றுக் காணப்பட்டன.

### 4.2 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலிற்கு முரணாக மீளாய்வாண்டிற்காக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 763,477 தொகையான பாதுகாப்பு சேவை எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமல் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 18 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 15 ஆகவும் இருந்தமையால் 03 பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள 02 விஞ்ஞானிகளின் பதவி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவி என்பற்றுக்காக தேவையான ஆட்சேர்ப்புக்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 03 கல்விக் குழுக்களின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 2 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகளின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அறிக்கை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவகத்தின் ஆரம்ப காலம் முதல் காணப்படுகின்ற விஞ்ஞான ரீதியிலான பதவியணியினரின் பற்றாக்குறையினால் இந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததாக ஆணைக்குழுவின் தலைவரினால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133(1) (அ) பிரமாணத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்ககாய்வு நடவடிக்கைகளைச் செய்வதற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டமொன்று 2015 செப்தெம்பர் 02 ஆந் திகதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரினால் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 21 விடயங்களில் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கொள்வனவு | முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமல் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | முறையான மதிப்பீடு தயாரிக்கப்படாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| (இ) | பதவியணியினரின் நிர்வாகம் | விஞ்ஞான சேவைகளிலுள்ள பதவியணியின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |